தீக்கதிர்



# ஆங்கிலம்
# கற்பது எளிதே!

முனைவர். டி.ஆர்.சுதா

# ஆங்கிலம் கற்பது எளிதே

முனைவர். டி.ஆர்.சுதா

மின்னூல் வெளியீடு : http://FreeTamilEbooks.com

உரிமை - Creative Commons Attribution Share Alike 4.0 India

கிரியேடிவ் காமென்ஸ். எல்லாரும் படிக்கலாம், பகிரலாம்.

பதிவிறக்கம் செய்ய -

http://FreeTamilEbooks.com/ebooks/learn_english_easy

அட்டைப்படம் - லெனின் குருசாமி - guruleninn@gmail.com

மின்னூலாக்கம் - லெனின் குருசாமி - guruleninn@gmail.com

கணியம் அறக்கட்டளை (Kaniyam.com/foundation)

This Book was produced using LaTeX + Pandoc

# மின்னூல் வெளியீடு

மின்னூல் வெளியீட்டாளர்: http://freetamilebooks.com

அட்டைப்படம்: லெனின் குருசாமி - guruleninn@gmail.com

மின்னூலாக்கம்: லெனின் குருசாமி - guruleninn@gmail.com

மின்னூலாக்க செயற்திட்டம்: கணியம் அறக்கட்டளை - kaniyam.com/foundation

# Ebook Publication

Ebook Publisher: http://freetamilebooks.com

Cover Image: Lenin Gurusamy - guruleninn@gmail.com

Ebook Creation: Lenin Gurusamy - guruleninn@gmail.com

Ebook Project: Kaniyam Foundation - kaniyam.com/foundation

This Book was produced using LaTeX + Pandoc

# பொருளடக்கம்


1. ஏப்ரல் 14, 2019 . . . . 8
2. ஏப்ரல் 21, 2019 . . . . 11
3. ஏப்ரல் 28, 2019 . . . . 14
4. மே 5, 2019 . . . . 16
5. மே 12, 2019 . . . . 21
6. மே 19, 2019 . . . . 26
7. மே 26, 2019 . . . . 29
8. ஜூன் 2, 2019 . . . . 32
9. ஜூன் 9, 2019 . . . . 36
10. ஜூன் 16, 2019 . . . . 39
11. ஜூன் 23, 2019 . . . . 41
12. ஜூன் 30, 2019 . . . . 44
13. ஜூலை 7, 2019 . . . . 47
14. ஜூலை 14, 2019 . . . . 51
15. ஜூலை 21, 2019 . . . . 54
16. ஆகஸ்ட் 4, 2019 . . . . 57
17. ஆகஸ்ட் 11, 2019 . . . . 60
18. செப்டம்பர் 15, 2019 . . . . 63
19. செப்டம்பர் 22, 2019 . . . . 66
20. செப்டம்பர் 29, 2019 . . . . 69
21. அக்டோபர் 6, 2019 . . . . 72
22. அக்டோபர் 13, 2019 . . . . 75
23. அக்டோபர் 27, 2019 . . . . 78
24. நவம்பர் 3, 2019 . . . . 81
25. நவம்பர் 10, 2019 . . . . 84
26. நவம்பர் 17, 2019 . . . . 87
27. நவம்பர் 24, 2019 . . . . 89
28. டிசம்பர் 8, 2019 . . . . 91

29. டிசம்பர் 15, 2019 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 94
30. டிசம்பர் 22, 2019 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 97
31. டிசம்பர் 29, 2019 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 101
32. ஜனவரி 19, 2020 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 103
33. பிப்ரவரி 2, 2020 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 105
34. பிப்ரவரி 9, 2020 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 107
35. பிப்ரவரி 16, 2020 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 109
36. பிப்ரவரி 23, 2020 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 111
37. மார்ச் 1, 2020 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 112
38. மார்ச் 8, 2020 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 114
FREETAMILEBOOKS.COM . . . . . . . . . . . . . . . . . . . . . . . 116
கணியம் அறக்கட்டளை . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 124
நன்கொடை . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 128

# 1. ஏப்ரல் 14, 2019

இப்போது 20 பெயர்ச் சொற்களை எழுதுங்கள். எப்படி எழுதுவது. அதுதான் நம் நோட்டுப் புத்தகம் இருக்கிறதே எடுத்து வைத்துக் கொண்டுதானே. படிக்கவே உட்கார்ந்தோம். அப்படியானால் ok. உங்களைச் சுற்றிப் பாருங்கள். என்ன தெரிகிறதோ அதையெல்லாம் எழுதுங்கள். அம்மா, அப்பா, அண்ணன், தங்கை, ட்யூப் லைட், Fan, சேர், டேபிள், புத்தகம்... இப்படி ஆங்கிலத்தில் இவற்றின் முதல் எழுத்து மட்டும் இதோ... M,

F, B, S, T, F, C, T, B

M _ _ _ _ _

F _ _ _ _ _

B _ _ _ _ _ _

S _ _ _ _ _

T _ _ _ _ _ _ _ _

F a n

C _ _ _ _

T _ _ _ _

B _ _ _ _

எழுதி முடித்தாயிற்றா? சரி. இப்போது மீண்டும் கண்களைச் சுழல விடுங்கள் கண்கள் = eyes. கண்களில் என்ன உள்ளது? பார்வை என்று பதில் சொன்னால் நீங்கள் தான் கூர்மையான அறிவுத்திறன் கொண்டவர்கள். Pupil, Iris என்று சொன்னால், உங்களுக்கு அறிவியல் அறிவு அதிகம். கண்மை, கருவிழி, வெண்திரை என்றால் இலக்கியத்தில் நாட்டமுள்ளவர். கண்களுக்குள் என் காதலன் தான் தெரிகிறார், காதலிதான் இருக்கிறார் என்றால் நீங்கள் காதல் வயப்பட்டிருக்கலாம். இங்கே அடிக்கோடிட்ட

வார்த்தைகள் எல்லாமே Noun

((மற்றபடி வாக்கியங்கள் அறிவியல் ஆராய்ச்சிப்படியோ, புள்ளி விவரப்படியோ நிரூபிக்கப்பட்டவை அல்ல. உங்களுக்கு Interest வரவேண்டும் என்பதற்காக) இப்பொழுது அடிக்கோடிட்ட வார்த்தைகளை எழுதிக் கொள்ளுங்கள். அதன்பின் மீண்டும் பாருங்கள். விளக்கு எதனால் எரிகிறது? மின்சாரம் = current, electricity. இரண்டுமே Noun. பார்க்கவோ, நேரடியாகத் தொடவோ முடியுமா? உணரத்தான் முடியும். இவையும் Noun. Noun has Singular and Plural சில Noun சொற்களுக்கு S என்ற எழுத்தைச் சேர்த்தால் போதும். சில சொற்கள் ies என்று மாறும் Plural ஆகும் போது city - cities நகரம் நகரங்கள், baby - babies குழந்தை, குழந்தைகள், memory - memories நினைவு, நினைவுகள், பற்களில் ஏற்படும் ஓட்டை cavity என்று சொல்லலாம். Plural cavities. சில சொற்கள் அப்படியே மாறிவிடும்.

Tooth Teeth

பல் பற்கள்

Mouse Mice

Foot Feet

Child Children

சில சொற்கள் ஒருமையும், பன்மையும் Same ஆக இருக்கும்.

Deer Deer மான் மான்கள்

Sheep Sheep ஆடு ஆடுகள்

Fish Fish மீன் மீன்கள்

Current Current மின்சாரம்

Electricity Electricity

மின்சாரம்

(Current என்றால் என்ன Electricity என்றால் என்ன என்பதை அறிவியல்

பாடபுத்தகங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்).

இப்போது நமக்கு அறிந்து கொள்ள வேண்டியது Electricity என்பதும் Current என்பதும் Noun.

# 2. ஏப்ரல் 21, 2019

இப்போது கீழே ஒரு பத்தி எழுதப்பட்டுள்ளது. இதில் உள்ள பெயர்ச் சொற்களை அடிக்கோடிட்டு உங்கள் நோட்டுப் புத்தகத்தில் எழுதிக் கொள்ளுங்கள் பார்க்கலாம்.

“ஆங்கிலம் கற்க ஆசைப்படுவர்கள் செய்ய வேண்டியது என்ன? அந்த ஆசையை மேலும் தீவிரமாக்கிக் கொள்வதே. ஆசைப்படுவதை அடைய வேண்டும் என்று நினைப்பது மனித இயல்பு. முயற்சி செய்தால் நினைத்ததை அடையலாம். நம் வீட்டின் மின் விளக்குகள், இரவின் நிலவு ஆகியவை கூட நமக்கு இதை உணர்த்துகின்றன. முயற்சி செய்ததால் மட்டுமே தாமஸ் ஆல்வா எடிசன் விளக்கைக் கண்டு பிடிக்க முடிந்தது. முயற்சி செய்ததால் தான் மனிதன் நிலவில் கால் பதித்தான்.”

இந்த பத்தியில் உள்ள noun அனைத்தையும் அடிக்கோடிட்டு, அவற்றை எடுத்து எழுதியவர்கள் good போட்டுக் கொள்ளுங்கள் உங்கள் நோட்டுப் புத்தகத்தில். தமிழில் எழுதி அதற்கு ஆங்கில வார்த்தைகளை எழுதியவர்கள் very good போட்டுக் கொள்ளவும்

Noun பல வகைப்படும். அதுபற்றிப் பிறகு பார்ப்போம். அதற்கு முன் சொல் என்றால் என்ன என்று பார்த்துவிடலாம். எழுத்துக்கள் சேர்ந்ததே சொல். எழுத்துக்கள் சேர்ந்ததே சொல் என்று சொல்லிவிட்டார்கள். எனவே, இப்படி எழுதலாமா? kng முடியாதல்லவா. நமக்குத்தான் தெரியுமே a, e, i, o, u என்ற ஏதாவது ஒரு எழுத்தாவது வரவேண்டும் என்று சரி kngi என்று எழுதி விடுவோமா? கூடாது என்பது தெரியும். நாம்தான் முதலிலேயே படித்தோமே ஒலியை வைத்தே எழுத்தை எழுத வேண்டும். அரசன் என்பதற்கு கிங் என்பது ஆங்கிலச் சொல், கி எனபதற்கு ki; ங் என்பதற்கு ng என்று ஒலியை நினைத்துக் கொண்டு எழுதினால் king என்றால் கிங் அரசன் என்று எளிதாக எழுதிவிடலாம். எழுத்து என்பது letter. எழுத்துக்கள் letters. a, e, i, o, u (y) ஆகியவற்றுக்கு ஒலி உண்டு. மற்ற எழுத்துக்கள் இந்த எழுத்துக்களாலேயே ஒலி பெறுகின்றன.

Letter

Letters

Word

Words

Phrase

Phrases

Clause

Clauses

Sentence

Sentences

Paragraph

Paragraphs

இவற்றுள் நாம் இப்போது Letters, Words பற்றி தெரிந்து கொள்வதே மிக முக்கியம்.

Letters - 26.

இதுபற்றி ஏற்கனவே கொஞ்சம் கற்றுக் கொண்டோம். 21+5 (Consonants இதர எழுத்துக்கள் + vowels a, e, i, o, u)

Word என்பது எழுத்துக்களின் அர்த்தமுள்ள கோர்வை.

King என்பது king என்று எழுதினால் மட்டுமே பொருள் தரும். ingk என்றோ ngki என்றோ எழுதினால் எந்தப் பொருளும் தராது. எனவே, அர்த்தமுள்ள கோர்வையே Word.

இந்த Word என்பதே வார்த்தை அல்லது சொல். இதைத்தான் நாம் noun, verb, adverb, adjective என்றெல்லாம் வகைப்படுத்து கிறோம்.

பல சொற்களை நாம் அன்றாடம் ஆங்கிலத்தி லேயே பயன்படுத்துகிறோம், நம்மையறி யாமலலேயே. உதாரணத்திற்கு School, Chair, Coffee, Paste, Brush, Doctor, Nurse, Patient இப்படி...

# 3. ஏப்ரல் 28, 2019

எழுத்துக்களைக் கோர்த்தால் சொற்கள். சொற்கள் பல வகைப்படும். Noun, adjective, adverb, verb, articles என பல வகைப்படும். இந்த ஒவ்வொரு வகையிலும், பல வகைகள் உண்டு. என்னடா ஆங்கிலம் பேசுவது மிகவும் எளிது என்று சொல்லிவிட்டு, இவர்களும் adjective, adverb என்று போகிறார்களே என்று நினைக்கத்தான் செய்வீர்கள். இது ஒரு பெரிய விஷயமே இல்லை. இவை என்ன என்று புரிந்து கொண்டால் மட்டும் போதும்.

இப்பொழுது நாம் ஒரு நோட்டு புத்தகத்தில் நிறைய வார்த்தைகள் எழுதி இருக்கிறோம் அல்லவா? அந்த வார்த்தைகள் ஆடு, மாடு கழுதை, குதிரை, குரங்கு, சிரங்கு, விலங்கு, விளக்கு, அப்பா, அம்மா, அண்ணன், தங்கை, தம்பி, நிலவு, வானம், காதல் கவிதை என்று பலப்பலவாக இருந்திருக்கும். நீங்கள் எழுதிய வார்த்தைகளை படியுங்கள்.

ஆடு என்பதற்கு sheep அல்லது goat என்று எழுதியிருப்பீர்கள். மாடு cow; கழுதை donkey; குதிரை horse; குரங்கு monkey; சிரங்கு boil; விலங்கு animal; விளக்கு lamp or light; அப்பா father; அம்மா mother; அண்ணன் elder brother; தங்கை younger sister இப்படி, பல வார்த்தைகளை எழுதி இருப்பீர்கள்.

சிலவற்றை நம்மால் பார்க்க, தொட முடியும். ஆடு மாடு என்பவற்றை பார்க்க முடியும், தொட முடியும். வானம் பார்க்க முடியும். தொட முடியுமா? சூரியன் பார்க்க முடியும். தொட முடியுமா? காற்று, இசை, நட்பு, காதல், பாசம் உணர முடியும் யாரிடமாவது காண்பிக்க முடியுமா? விலை கொடுத்து வாங்க முடியுமா? இல்லை, இலவசமாகத்தான் வாங்க முடியுமா? உணர முடியும் அல்லது உணரச் செய்ய முடியும். பார்க்க மற்றும் தொட முடிகின்ற பொருட்கள் noun. உணர முடிகின்ற பொருட்களும் noun. மிக எளிதாக சொல்வதென்றால், எதற்கெல்லாம் பெயர் இருக்கிறதோ அவை எல்லாம் noun.

சற்று நேரம் கடற்கரைக்குப் போவோமா? Sea, seashore, shell, ship, people, crowd, children, beach, sand, snacks, boat, net, fish, fisherman, lovers, salesman, cotton candy, waves, snail, crab இப்படி பல வார்த்தைகளை நாம்

கடற்கரையில் அறிந்து கொள்கிறோம். Breeze, oxygen, air என்பது போன்ற வார்த்தைகளையும் நாம் அங்கே தெரிந்துகொள்ளலாம். பார்க்க முடிந்தாலும், பார்க்க முடியாவிட்டாலும், தொட முடிந்தா லும், முடியாவிட்டாலும், ஏதேனும் ஒன்றுக்கு பெயர் என்று ஒன்று இருந்தால் அது பெயர்ச்சொல். All naming words are nouns. இதில் பல வகைகள் உள்ளன. இவற்றைப் பற்றி பின்னர் தெரிந்துகொள்ளலாம்.

இப்போது நமக்குத் தெரிய வேண்டியது பெயர் இருந்தால் பெயர்ச்சொல் அவ்வளவே. Officeக்கு கிளம்ப வேண்டுமே. Time ஆகிவிட்டது. Bus பிடிக்க வேண்டும். தாமதமாகப் போனால் manager வேறு முறைப்பார். Work எல்லாம் கெட்டுப் போகும். Morning லேயே இப்படி என்றால் full day problem தான். Office, time, bus, manager, work, morning, day, problem இந்த வார்த்தைகள் எல்லாமே noun. இன்றைக்கு leave தான். என்னால் எழுத முடியும் என்று நினைப்பவர்கள் இதுபோல் பெயருள்ள வார்த்தைகளை எழுதலாம். எழுதும்போது ஒரு தலைப்பைப் போட்டுக் கொள்ளுங்கள்.

school. இது தொடர்பாக உங்களுக்கு தெரிந்த அனைத்து noun சொற்களையும் எழுதுங்கள்.

t, s, d, t, b, c, c, c, b, b, p, p, p, b, n, b, w, m, பள்ளிக்கூடம் தொடர்பாக,சட்டென்று நினைவில் தோன்றக் கூடிய சில வார்த்தைகளின் முதல் எழுத்துக்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன. இவை அனைத்துமே noun. நீங்கள் கெட்டிக்கார students ஆயிற்றே. இதற்கு மேலும் பல வார்த்தைகளை எழுதி இருப்பீர்கள்.

Noun களுக்கு singular plural உண்டு. இதை நாம் முன்பே பார்த்திருக்கிறோம். உங்கள் நோட்டுப் புத்தகத்தைத் திருப்பிப் பாருங்கள். Child children, baby babies, cow cows, page pages ஞாபகம் வந்து விட்டதா? ஆங்கிலம் கற்பது எளிது. நமக்கு தெரிந்த வார்த்தைகளை நினைவுபடுத்திக் கொள்வது, புதிய வார்த்தைகளை அதன் உச்சரிப்போடும், அர்த்தத்தோடும் தெரிந்து கொள்வது போன்ற முயற்சிகள் ஆங்கிலம் கற்பதை மேலும் easyயாக்கி விடும்.

# 4. மே 5, 2019

Noun சொற்களுக்கு singular and plural உண்டு. இதுதான் எங்களுக்கு ஏற்கனவே தெரியுமே. அடுத்ததுக்கு போகலாமே என்று தோன்றுகிறது அல்லவா? சரி இப்பொழுது adjective என்றால் என்ன என்று பார்ப்போம். அடடா இது என்ன புதிய சொல்லாக இருக்கிறது. இது ரொம்ப கஷ்டமாக இருக்குமோ? என்றெல்லாம் யோசிக்கவே வேண்டாம். நோட்டுப் புத்தகத்தை எடுத்துக் கொள்ளுங்கள். பேனா எழுதுகிறாதா என்று பார்த்து அதையும் எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதுமே எந்த topic பற்றி எழுதினாலும், என்றைய தினத்தில் எழுதினாலும், அன்றைய தினத்தின் date ஐ போட்டுவிட்டு அதன்பின் எழுத ஆரம்பியுங்கள். இது உங்கள் progressஐ உங்களுக்கு எடுத்துச் சொல்லும். எவ்வளவுக்கெவ்வளவு நீங்களாக ஆங்கில வார்த்தைகளை எழுதுகிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு அது உங்களின் English knowledgeஐ வளர்க்க உதவும்.

சரி இப்பொழுது adjective என்றால் என்ன என்று பார்ப்போம்.

Big cow

Black cat

Tall man

Friendly father

Loving mother

Affectionate brother

Caring sister

Small tortoise

Little boy

மேலே கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகளில் எவை noun என்பதை under-

line செய்யுங்கள் பார்க்கலாம். We know noun. சிவப்பு பேனாவால் underline செய்துவிட்டேன் என்று சொல்பவர்கள் good போட்டுக்கொள்ளுங்கள். அந்த வார்த்தையை underline செய்து மேலே noun என்றும் எழுதி விட்டேன் என்று சொல்பவர்கள் very good போட்டுக் கொள்ளவும்.

Cow, cat, man, father, mother ஆகியவை

Naming words. எனவே இவை nouns.

இந்த nounsஐ விவரிக்க பயன்படும் சொற்களே adjective எனப்படும். Little, big, small போன்ற words, nounகளைப் பற்றி கூடுதல் தகவல்களைத் தெரிவிக்கின்றன. இவை adjectives. இப்போது வேறு ஒரு வண்ண பேனாவால் adjectivesஐ underline செய்து கொள்ளுங்கள். Underline செய்தவர்களுக்கு good. Underline செய்து adjective என்று மேலே எழுதியவர்களுக்கு very good. So adjective என்பது மிகவும் simpleஆன ஒரு விஷயம். Nouns are naming words. Words describing nouns are adjectives.

கீழே சில வார்த்தைகள் கொடுக்கப்பட்டுள்ளன

இவற்றுக்கு English words எழுதி adjectivesம் எழுத வேண்டும்.

பந்து

மைதானம்

நண்பன்

ஆசிரியர்

வாக்காளர்

வேட்பாளர்

பிரதமர்

அமைச்சர்

திருடன்

பணம்

காவல்காரர்

கதவு

நாற்காலி

முக்காலி

பருவம்

காலணி

பெட்டி

சிறுமி

கணவன்

மனைவி

ஓட்டுனர்

தந்தை

தாய்

இந்தச் சொற்களுக்கான English words எழுத வேண்டும். அந்த wordsக்கு முன்னால் தகுந்த adjectivesஐ எழுத வேண்டும்.

இப்பொழுது எங்களால் noun மற்றும் adjectives வார்த்தைகளைக்கண்டுபிடித்து விட முடியும் என்பவர்கள், உங்கள் தோளைத்தட்டி உங்களைப்பாராட்டிக் கொள்ளுங்கள். Friends இணைந்து படிக்கிறீர்கள் என்றால் ஒருவரை ஒருவர் தட்டிக் கொடுத்துக் கொள்ளலாம்.

தேர்வு

படித்தால் தேர்வு எழுத வேண்டும் அல்லவா? எதற்காக தேர்வு எழுதுகிறோம்? இதுவரை படித்தவற்றை நாம் ஒழுங்காகப் புரிந்து கொண்டிருக்கிறோமா என்று தெரிந்துகொள்வதற்காகவே.

Dictionaryயை பார்க்கக்கூடாது. internetக்கும் no சொல்லி விடுங்கள்.

நீங்கள் இதுவரை படித்தவற்றை மீண்டும் ஒருமுறை படித்துப் பார்த்து விட்டு பின்னர் விடைகளை எழுதலாம்.

இதோ சில கேள்விகள் உங்களுக்காக:

1. ஆங்கில மொழியில் மொத்தம் எத்தனை எழுத்துக்கள் உள்ளன? அவை யாவை?
2. Vowels எத்தனை? ஒவ்வொரு vowel ஐயும் பயன்படுத்தி 5 வார்த்தைகளை எழுதுக.
3. Y என்ற எழுத்தில் முடியும் பத்து சொற்களை எழுதுக.
4. M என்ற எழுத்தில் முடியும் பத்து சொற்களை எழுதுக.
5. E என்ற எழுத்தில் முடியும் பத்து சொற்களை எழுதுக.
6. ஏதாவது 10 nounகளை எழுதுக. இவை நம்மால் பார்க்க முடிகின்றவையாக இருக்க வேண்டும்.
7. ஏதாவது 10 nounகளை எழுதுக. இவை நம்மால் பார்க்க முடிவதாக இருக்கக்கூடாது. உணர முடிவதாக மட்டுமே இருக்க வேண்டும்.
8. ஏதாவது 10 adjectives கள் எழுதுக.
9. ஏதேனும் 10 singular words எழுதுக.
10. நீங்கள் எழுதியுள்ள 10 singular wordsகளுக்கு plural என்னவென்று எழுதுக.

எழுதி அனுப்ப வேண்டிய முகவரி:

1. ஆங்கில மொழியில் மொத்தம் எத்தனை எழுத்துக்கள் உள்ளன? அவை யாவை?
2. Vowels எத்தனை? ஒவ்வொரு vowel ஐயும் பயன்படுத்தி 5 வார்த்தைகளை எழுதுக.
3. Y என்ற எழுத்தில் முடியும் பத்து சொற்களை எழுதுக.
4. M என்ற எழுத்தில் முடியும் பத்து சொற்களை எழுதுக.

5. E என்ற எழுத்தில் முடியும் பத்து சொற்களை எழுதுக.
6. ஏதாவது 10 nounகளை எழுதுக. இவை நம்மால் பார்க்க முடிகின்றவையாக இருக்க வேண்டும்.
7. ஏதாவது 10 nounகளை எழுதுக. இவை நம்மால் பார்க்க முடிவதாக இருக்கக்கூடாது. உணர முடிவதாக மட்டுமே இருக்க வேண்டும்.
8. ஏதாவது 10 adjectives கள் எழுதுக.
9. ஏதேனும் 10 singular words எழுதுக.
10. நீங்கள் எழுதியுள்ள 10 singular wordsகளுக்கு plural என்னவென்று எழுதுக.

எழுதி அனுப்ப வேண்டிய முகவரி:

2/38, குயவர் வீதி, கிழக்கு ஜோன்ஸ் சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600015

தட்டச்சு செய்து மின்னஞ்சலும் அனுப்பலாம் (vannakkathir@gmail.com). எழுதி photo எடுத்து 9498379729 என்ற எண்ணுக்கு whatsapp செய்யலாம்.

நீங்கள் இதுவரை படித்தவற்றை மீண்டும் எடுத்து படித்துப் பார்த்து, உங்கள் விடைகள் சரியா என்று கண்டுபிடித்து, நீங்களே திருத்திக் கொள்ளலாம். விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 27 மே 2019.

# 5. மே 12, 2019

ஆங்கிலத்தில் மொத்தம் உள்ள எழுத்துக்கள் 26. A e I o u என்பவை vowels. எழுத்துக்களை கோர்த்து அர்த்தம் வருமாறு அமைத்தால் அவை வார்த்தைகள். Naming words are nouns. Nounகளை விவரிப்பவை adjectives.

இப்பொழுது verbs என்றால் என்ன என்று அறிந்து கொள்வோம். இப்பொழுது என்ன செய்து கொண்டு இருக்கிறீர்கள்? வாசித்துக் கொண்டிருக்கிறீர்கள். இதை ஒரு வாக்கியமாக சொல்வதென்றால் I am reading என்று சொல்லலாம். இதில் reading என்பது என்ன வேலை செய்து கொண்டிருக்கிறீர்களோ அதைக்குறிக்கும். Read என்பது rootverb. இதுபோல் நாம் செய்யும் வேலைகளை குறிக்கும் சில சொற்களைப் பார்க்கலாம்

Read.

Write

Copy

Cut

Paste

Sing

dance

sleep

go

come

see

study

இவை அனைத்தும் verbs. Rootverbs.

இது போன்று ஒரு இருபது சொற்களை உங்கள் நோட்டு புத்தகத்தில் எழுதுங்கள்.

ஆங்கிலத்தில் சில சொற்கள் verbs ஆகவும் வரும். Noun ஆகவும் வரும். சில சொற்கள் noun ஆகவும் வரும். Adjectives ஆகவும் வரும். இது பற்றி பின்னர் பார்க்கலாம்.

இப்பொழுது நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கிறீர்கள். எப்படி வாசித்துக் கொண்டிருக்கிறீர்கள்?

I am reading loudly

I am reading slowly

என்று பல விதமான பதில்களை நீங்கள் கூறக்கூடும். இதில் loudly slowly என்ற வார்த்தைகள் நீங்கள் செய்யும் செயலை அதாவது verbsகளை விவரிக்கின்றன. இவை adverbs எனப்படும்.

Verbs adverbs nouns adjectives prepositions articles என்று பல parts of speech உள்ளன. இவற்றில் நான்கு மட்டுமே நாம் இதுவரை பார்த்திருக்கிறோம். மற்றவற்றை, போகப் போகத் தெரிந்து கொள்ளலாம்.

வார்த்தைகளை வாக்கியம் அடுக்கினால் கிடைக்கும். இது சரியா?

வார்த்தைகளை அடுக்கியாயிற்று. ஆனால் அர்த்தம் வரவில்லையே. வார்த்தைகளை முறைப்பட அர்த்தம் வரும் வகையில் அடுக்கினால் மட்டுமே வாக்கியம் கிடைக்கும். இதேதான் ஆங்கிலத்திற்கும். வார்த்தைகளை ஒழுங்காக அடுக்க வேண்டும். முதலில் வார்த்தைகளை எப்படி அடுக்குவது என்று பார்ப்போம்.

I am reading

உங்கள் அருகில் இருப்பவரைப் பாருங்கள். அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார்?

She is sleeping.

இப்போது கேள்வி கேட்போம்.

Where is she sleeping?

She is sleeping in the bedroom.

Why is she sleeping?

She is tired. So she is sleeping.

He is standing.

இப்போது நீங்கள் கேள்வி கேளுங்கள்

................. is he standing?

Answer கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இந்த பதில் வர வேண்டுமானால் நீங்கள் என்ன கேள்வி கேட்டிருக்க வேண்டும்.

He is standing near me.

Where

Why

What

When

Who

How என்பவை கேள்விக்கான சில சொற்கள்.

Present Continuous Tense

கீழே கொடுக்கப்பட்டவற்றை உங்கள் நோட்டுப் புத்தகத்தில் எழுதிக் கொள்ளுங்கள்.

I+am+root verb+ing

We+are+root verb+ing

They+are+root verb+ing

You+are+root verb+ing

He+is+root verb+ing

She+is+root verb+ing

It+is+root verb+ing

நான் மீண்டும் மீண்டும் சொல்வது ஆங்கிலம் கற்பது எளிது. தமிழில் சில வாக்கியங்களை பார்ப்போம்.

நான் எழுதிக் கொண்டிருக்கிறேன்.

நாங்கள் படித்துக் கொண்டிருக்கிறோம்

அவர்கள் சிரித்துக் கொண்டிருக்கிறார்கள்

நீ பார்த்துக் கொண்டிருக்கிறாய்

நீங்கள் யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள்

அவள் பேசிக்கொண்டிருக்கிறாள்

அவன் குடித்துக் கொண்டிருக்கிறான்

அது தாவிக் கொண்டிருக்கிறது

அவை பறந்து கொண்டிருக்கின்றன

அவனா அவளா அதுவா அவர்களா அவைகளா என்பதைப் பொறுத்து வாக்கியங்களில் வினைச்சொற்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும். Englishல் அந்தக் கவலை எல்லாம் இல்லை. வினைச் சொற்களை மாற்ற வேண்டாம் வினைச்சொற்கள் எல்லாருக்குமே same தான்.

இப்பொழுது கீழே கொடுக்கப்பட்டுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புங்கள்.

I am ......... ing

we are......... ing

they are......... ing

you are......... ing

he is ......... ing

she is ......... ing

it is......... ing

இதை ஆங்கிலத்தில் present continuous tense என்று குறிப்பிடுவார்கள்.

# 6. மே 19, 2019

Present continuous tense என்பது நீங்கள் இப்போது செய்து கொண்டிருக்கும் செயலைக் குறிக்கும். இது

I

We

They

You

He

She

It

என எல்லோருக்கும் எல்லாவற்றுக்கும் பொருந்தும். அதுமட்டுமல்ல, ஒரு செயலை நீங்கள் பல காலமாக செய்து கொண்டிருக்கிறீர்கள் என்றாலும் Present continuous tense Sentences ஐப் பயன்படுத்தலாம். உதாரணமாக I am studying in Nehru College. Balu is writing a novel. kannan is learning english. B.Com., B.A., B.E., என்று எந்த course ஆக வேண்டுமானாலும் இருக்கலாம். எந்தக் கல்லூரியாக வேண்டுமானாலும் இருக்கலாம்.

நீங்கள் படித்துக் கொண்டிருக்கிறீர்கள். செயல் தொடர்ந்து கொண்டிருக்கிறது Action is Continuing. இன்று விமுறையாக இருக்கலாம். அதனால் கல்லூரிக்குப் போகாமல் கூட இருக்கலாம். (விடுமுறை நாட்களைத் தவிர மற்ற நாட்களில் கண்டிப்பாகக் கல்லூரிக்குச் சென்றுவிட வேண்டும். இது ஒரு சின்ன அறிவுரை. இது வேறு Tenseல் வரும். அதைப் பின்னர் பார்க்கலாம்). ஆனால் யார் எப்போது உங்களைக் கேட்டாலும், நீங்கள் I am studying in Nehru College என்று தாதாளமாக Present Continuous tense ஐ பயன்படுத்தலாம்.

Balu is writing a novel. இந்த Sentence ல் பாலு இரண்டு ஆண்டுகளுக்கு முன்

எழுதத் தொடங்கியிருந்திருக்கலாம். இன்று நீங்கள் பாலுவைப் பார்க்கும் நேரத்தில் அவர் தூங்கிக் கொண்டு கூட இருக்கலாம். He is sleeping என்பது எத்தனை Correct. அதே அளவு Balu is writing a novel என்பதும் correct. எனவே ஒரு செயல் அப்போதுதான் செய்து கொண்டிருக்கப்பட வேண்டும் என்பதில்லை. அது ஒரு process ஆகக் கூட இருக்கலாம். இரண்டு, மூன்று வருடங்களாக நிகழ்ந்து கொண்டிருக்கலாம். இரண்டு, மூன்று மணி நேரமாக நடந்து கொண்டிருக்கலாம். இங்கு நமக்குத் தேவை Present Continuous tense தான்.

Kannan is learning English. நீங்கள் கண்ணனைப் பார்க்கும் போது. அவர் பாடிக் கொண்டிருக்கலாம். ஆடிக் கொண்டிருக்கலாம்.

Kannan is singing

Kannan is dancing

மேலே குறிப்பிட்ட இரண்டு வாக்கியங்களையும் சேர்த்து kannan is singing and dancing எல்லாமே correct.

Kannan is learning English என்பது ஒரு process. ஒரு மாதமாக அவர் கற்றுக் கொண்டிருக்கலாம். முழுமையாக கற்றுக் கொள்ள ஓராண்டு கூட ஆகலாம். ஆனால் அவர் கற்றுக் கொண்டிருக்கும் காலம் முழுக்க நீங்கள் kannan is learning English என்று கூறலாம்.

So, Present Continuous tense என்பது இப்போது நடந்து கொண்டிருப்பதையும், சில காலமாகத் தொடர்ந்து, இப்போதும் நடந்து கொண்டிருப்பதையும் குறிப்பிடப் பயன்படுத்தலாம்.

கீழே சில குறிப்புகள் உள்ளன. அவற்றை Present Continuous tense ல் எழுதுங்கள்.

Jasmine (write)

My friend Saravanan (stand)

My father (eat)

Kala’s classmate Geetha (prepare)

நமக்கு Present Continuous tense ன் structure தெரியும். மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டுமென்று நினைப்பவர்களுக்காக, இதோ...

I + am + root verb + ing

We + are + root verb + ing

They + are + root verb + ing

You + are + root verb + ing

He + is + root verb + ing

She + is + root verb + ing

It + is + root verb + ing

Elephant is eating a sugarcane.

Qus: What is elephant doing?

Ans: Elephant is eating.

What is elephant eating?

Elephant is eating a sugarcane.

Where is elephant eating the sugarcane?

Elephant is eating the sugarcane in the temple.

இவ்வாறு நீங்கள் எந்தவொரு வாக்கியத்தை எழுதினாலும், அதற்கு இரண்டு, மூன்று கேள்விகளைக் கேட்டு, அதன்பின் அதற்கான பதில் வாக்கியங்களை எழுதுங்கள். இப்படி எழுதும்போது சொல்லிக் கொண்டே எழுத வேண்டும்.

# 7. மே 26, 2019

உங்களுக்கு English fluent ஆகப் பேச வேண்டும் அல்லவா? அதனால், எழுதும்போது ஒவ்வொரு வார்த்தையையும் சொல்லிக் கொண்டே எழுத வேண்டும். ஒரு வாக்கியத்தை எழுதி முடித்தபின் அந்த வாக்கியத்தை கேள்வி என்றால் கேள்வி போல் கேட்க வேண்டும். பதில் என்றால் பதில் சொல்வது போல் சொல்லிப் பழக வேண்டும். சரி இப்போது Present Continuous tense பார்த்தோம். இதற்கு Negative உள்ளது.

Present Continuous tense negative.

I + am + not + root verb + ing

We + are + not + root verb + ing

They + are + not + root verb + ing

You + are + not + root verb + ing

He + is + not + root verb + ing

She + is + not + root verb + ing

It + is + not + root verb + ing

Geetha is not standing with Rama. She is standing alone.

Geetha is not standing near a tree. She is standing near a swimming pool.

இதுபோல் நீங்களே வாக்கியங்களை எழுதுங்கள்.

Ramakrishnan is not distributing sweets. He is distributing fruits.

What is Ramakrishnan doing?

Ramakrishnan is distributing.

What is Ramakrishnan distributing?

Ramakrishnan is distributing fruits.

Is Ramakrishnan distributing sweets?

No. Ramakrishnan is not distributing sweets. He is distributing fruits.

கீழே கொடுக்கப் பட்டுள்ள குறிப்புகளை வைத்து Present Continuous tense negative வாக்கியங்களை எழுத முயற்சி செய்யுங்கள். முயன்றால் முடியாதது இல்லைதானே.

Ravi (read) (book)

Ravi ___ ____ ____ ____

Passenger (buy) (ticket)

Passenger ____ _____ _____ _____

Train (arrive) (6 PM)

Train ____ _____ _____ ______

Arjun (type) (matter)

Arjun ______ ______ _____ ______

Sheela's friend Yamuna (wait) (bus stop)

Sheela's friend Yamuna ______ _____ _______ __________

Sekar and Lalitha (fight)

Sekar and Lalitha _______ ________

Rekha and Latha (enjoy) (holiday)

Rekha and Latha ______ _______ _______ _______

You (show) (photo)

You _______ _______ ________ _________

குறிப்புகளை வைத்துக் கொண்டு, Present Continuous structure ஐயும் படித்துக் கொண்டு கோடிட்ட இடங்களை சரியாக நிரப்பினால் போதும். உங்கள் sentences readyயாகிவிடும். இப்போது not மட்டும் சேர்த்து இதே

வாக்கியங்களை எழுதிப் பாருங்கள். Present Continuous tense negativeம் அத்துப்படி யாகிவிடும்.

ஆங்கிலம் கற்பது எளிதே

# 8. ஜூன் 2, 2019

சிறிய வாக்கியங்களை எழுதிவிட்டீர்கள் அல்லவா? இப்பொழுது ஒரு வார்த்தையை எடுத்துக் கொள்வோம். Crying யார் அழுது கொண்டிருக்கிறார்கள்?

who is crying?

(தமிழில் 'யார் அழுது கொண்டிருப்பது?' என்றும் கேட்போம்)

ஆங்கிலத்தில் 'who is crying?' என்று மட்டும் தான் கேட்க வேண்டும் (இது Present continuous tenseல்)

அதேபோல் வேறு ஒரு வார்த்தை Walking

Who is walking? என்று தான் கேட் வேண்டும்.

Kavitha is walking.

Where? என்று தெரிந்து கொள்ள வேண்டும். அப்போது கேள்வியை எப்படி அமைப்பது. ரொம்ப simple கேள்விக்கான வார்த்தையை முதலில் போட்டுவிட வேண்டும்.

Where ___ __ ___?

அடுத்த மூன்று கோடிட்ட இடங்களை நிரப்ப வேண்டும்.

நாம் kavithaவைப் பற்றித்தானே பேசிக் கொண்டிருக்கிறோம்.

கவிதா எங்கே நடந்து கொண்டிருக்கிறாள் என்று தெரிந்து கொள்ளத்தானே கேள்வி கேட்கிறோம்.

அப்பொழுது kavitha

I, We, They, You, He, She, It என்பதில் எதில் பொருந்துவார்? She என்று அழகாகப் பதில் சொல்லிவிட்டீர்கள்தானே.

Very good கவிதா எங்கே நடந்து கொண்டிருக்கிறாள்? என்பதற்கு

ஆங்கிலம் அறிவதற்கு முன் Present continuous question structure ஐப் பார்த்துவிடலாம்.

Present continuous question

Am + I + root verb + ing?

Are + We + root verb + ing?

Are + They + root verb + ing?

Are + You + root verb + ing?

Is + He + root verb + ing?

Is + She + root verb + ing?

Is + It + root verb + ing?

Crying என்ற வார்த்தையில்

Cry என்பது root verb

Sleeping என்ற வார்த்தையில் sleep என்பது root verb

See + ing =

Vomit + ing =

Complain + ing =

Instruct + ing =

Design + ing =

Cut + ing =

Waste + ing =

Pin + ing =

Drive + ing =

Question + ing =

மேலே உள்ள பத்து சொற்களையும் எழுதும்போது waste + ing = wasting என்று ஆகியிருக்கும். பெரும்பாலும் e என்று முடிகிற வார்த்தைகளோடு ing சேர்ந்தால், ing சேர்க்கப்பட்ட பிறகு ‘e’ என்ற எழுத்து வராது.

சில சொற்களுடன் ing சேர்க்கும் பொழுது அந்தச் சொல்லின் கடைசி எழுத்து இரண்டு முறை வரும். இதற்கெல்லாம் இலக்கணங்கள் உள்ளன. அவற்றை ரொம்ப deep ஆக இப்போது பார்க்க ஆரம்பித்தால், நாம் ஆங்கிலம் பேச பல காலமாகிவிடும். அதனால், நமக்குத் தேவையானவற்றில் சில விஷயங்களை மட்டுமாவது
தெரிந்து கொள்வோம்.

Cut

Put

இவற்றோடு ing சேர்ந்தால் கடைசி எழுத்து இரட்டிப்பாகும். ‘t’ என்ற எழுத்தில் முடியும் எல்லா சொற்களுக்கும் இதுபோல் ‘t’ இரட்டிபாகும் என்று கிடையாது. உதாரணம்: visit

Spelling பற்றி பிறகு பார்க்கலாம். இப்போது மீண்டும் வாக்கியத்திற்குச் செல்லலாம். கவிதா எங்கே நடந்து கொண்டிருக்கிறாள்?

Where ___ ___ ___?

கவிதா ‘she’ என்று தெரியும். ஒருமை என்பதால் ‘is’ வரவேண்டும். Question structure தெரியும். Where is kavitha walking?

Is, was, will, have, has என்பதெல்லாம் தமிழில் தனியாகக் கிடையாது. அவை வினைச் சொற்களுக்குள்ளேயே பொதிந்திருக்கும். ஆங்கிலத்தில் kavitha, kareem, Raghu, Rajan யாராக இருந்தாலும் Walking என்பது Walking தான். ஆணாக இருந்தால் He is Walking பெண்ணாக இருந்தால் She is
Walking.

Question என்றால்

Is she walking?

Is he walking?

இப்போது எங்கே என்ற வினாச் சொல்லையும் சேர்த்தால் where is she walking என்பதே சரியான கேள்வியாகும்.

She is walking in the park/

இப்பொழுது எந்த parkல் என்பது கேள்வி.

In which park is she walking?

She is walking in Jeeva Park

ஏன்?

Why is she walking?

She wants to be healthy. So she is walking.

# 9. ஜூன் 9, 2019

ஆங்கிலத்தில் கேள்விகள் கேட்பது மிகவும் எளிது. கீழே உள்ள வார்த்தைகளை உங்கள் note bookல் எழுதிக் கொள்ளுங்கள்.

1. When எப்போது
2. What என்ன
3. Where எங்கே
4. Why ஏன்?
5. How எப்படி?
6. How many எத்தனை
7. How much எவ்வளவு
8. Who யார்
9. To whom யாருக்கு
10. With whom யாருடன்
11. By whom யாரால்
12. From whom யாரிடமிருந்து

இவற்றை மனதில் நன்றாகப் பதிய வைத்துக் கொள்ளுங்கள்.

முதல் ஏழு கேள்விகளை Present Continuous Tenseல் பயன்படுத்தப் போகிறோம்.

When are you meeting him?

I am meeting him next week.

Present Continuous Tense வாக்கியங்களை ஒரு process க்கு பயன்படுத்தலாம் என்று ஏற்கனவே பார்த்திருக்கிறோம். இந்த Tense வாக்கியங்களை இனி நிகழவிருக்கும் விஷயங்களுக்கும் பயன்படுத்தலாம். எப்பொழுது அவ்வாறு பயன்படுத்தலாம்? அதாவது ஒரு விஷயம் நிச்சயமாக, உறுதியாக நடக்கப் போகிறது
என்றால் அப்போது Present Continuous பயன்படுத்தலாம்.

The American president is visiting India next week.

இது உறுதிப்படுத்தப்பட்ட விஷயம் என்பதால் இவ்வாறு கூறலாம். Suppose நீங்களும் உளங்கள் மனைவியும் இன்னும் ஆறு மாதங்கள் கழித்து Germanyக்கு போகப் போகிறீர்கள். என்னிடம் இதைச் சொல்ல வேண்டும்.

எப்படிச் சொல்ல வேண்டும்?

இதோ, இப்படித்தான்.

"Madam, Myself and my wife are going to Germany after six months"

இதை வேறு மாதிரியாகவும் சொல்லாம்.

"Madam, Myself and my wife are going to Germany, this December".

அப்பொழுது நான் உங்களிடம்

Why are you going to Germany?

How are you going to Germany?

என்று கேட்பேன்.

இதற்கு என்ன பதில் சொல்வீர்கள்.

முதல் கேள்விக்கு,

We want to see Germany. So we are going there என்று பதில் சொல்லலாம்.

இரண்டாவது கேள்விக்கு,

We are going by ship to London. From there we are going to Germany என்றும் சொல்லாம்.

கேள்விகள் கேட்கும் போது, When what where how mony why என்பது போன்ற சொற்கள் வாக்கியங்களின் முதலில்தான் வரும்.

Why are you laughing?

Why are you screaming?

Why is she irritating me?

What is he handling?

Which page is he turning?

Where is he taking the bag to?

How many days are they staying Australia?

# 10. ஜூன் 16, 2019

தேர்வு வைத்திருந்தோம் அல்லவா? அந்தத் தேர்வுக்கு சிலர் வாட்ஸ்அப் மூலமும், சிலர் கடிதங்களும் அனுப்பியிருந்தனர். அவர்களுக்கு எனது பாராட்டுக்கள். தொடர்ந்து வாசித்து, அதில் எழுதியுள்ளதைப் போல முறையாகப் பயிற்சி செய்தால், தேர்வு எழுதுவது எளிது. நாம் எந்த அளவிற்குக் கற்றுக் கொண்டுள்ளோம் என்பதையும் சுயபரிசோதனை செய்து கொள்ள ஒரு வாய்ப்பு.

பவித்ரா என்பவர் பல சரியான விடைகளை எழுதியிருந்தார். வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பிடல் காஸ்ட்ரோவும் மிக அழகான கையெழுத்தில் பல சரியான விடைகளை எழுதியிருந்தார். பலர் பொதுவான சில தவறுகள் செய்திருந்தனர். அவை என்ன என்று பார்க்கலாம்.

Singular Plural

ஒருமை பன்மை

Box Boxes

Fox Foxes

Goose Geese

Tooth Teeth

Pen Pens

Pencil Pencils

Singular வார்த்தைக்கு Plural தெரியவில்லை என்றால் Dictionary யை எடுத்துப் பார்த்தாலே போதும். அதில் Plural குறிப்பிடப்பட்டிருக்கும். நிறைய வார்த்தைகளில் Spelling Mistake இருந்தது. இதை எப்படி சரி செய்து கொள்வது என்பது பற்றி பின்னர் விரிவாகப் பார்க்கலாம்.

முக்காலி என்றால் Stool. சில சொற்களுக்கு நமக்கு ஆங்கில வார்த்தை

தெரியாவிட்டால் தமிழ் – ஆங்கில அகராதியைப் புரட்டி பார்த்தால் போதும் தெரிந்துவிடும்.

நிறைய வார்த்தைகளை எழுதும் போது சிலவற்றுக்கு Capital Letter பயன்படுத்த வேண்டும். உதாரணம்: English, England. நாடுகள், மொழிகள் போன்றவற்றின் பெயர்களை எழுதினால் முதல் எழுத்து Capital letter ல் தான் இருக்க வேண்டும். அதே போல் மனிதர்களின் பெயர்களை எழுதினால் முதல் எழுத்து Capital letter தான் இருக்க வேண்டும்.

Josephine

Kala

Vishal

Mukesh

Muneera

Jalaja

இவ்வாறு முதல் எழுத்து Capital letter பயன்படுத்த வேண்டும். வாக்கியங்களைத் துவங்கும் போதும் முதல் எழுத்து Capital letter.

Our appreciation is all.

Castro has written very neatly and legibly.

Theekkathir and I wish you all a very happy weekend.

I என்ற எழுத்து நான் என்பதைக் குறிக்கும் வகையில் எங்கே வந்தாலும் அது Capital letter ஆகத்தான் இருக்க வேண்டும்.

தேர்வில் பங்கேற்ற அனைவருக்கும் பாராட்டுக்கள். தொடர்ந்து படியுங்கள். ஆகஸ்ட் மாதம் 15ஆம் தேதி அடுத்த தேர்வு. நீங்கள் ஒவ்வொருவரும் தவறுகள் ஏதுமில்லாத, எளிமையான sentences பயன்படுத்தக் கற்றுக் கொள்ள எழுத்துக்களையும், வார்த்தைகளையும் பற்றித் தெரிந்து கொள்வதே முதல்படி அதில் தேறிவிட்டீர்கள்.

வாழ்த்துக்கள்.

# 11. ஜூன் 23, 2019

இங்கே ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். Where what why how many போன்ற வினா வார்த்தைகளுக்குப் பிறகு is, are ஆகியவை வருகின்றன. இந்த வார்த்தைகளுக்குப் பிறகு தான் I we they you he she it வருகின்றன. எனவே question கேட்க வேண்டுமென்றால், முதலில் கேள்விக்கான வார்த்தையைப் போட்டுவிட வேண்டும்.

அதன்பிறகு I பற்றிய கேள்வி என்றால் அதற்குமுன் am போடுங்கள். We they you என்றால் are. He she it என்றால் is. குழப்புகிறதா?

கீழே கொடுக்கப்பட்டுள்ள structureஐப் பாருங்கள் தெளிவாகிவிடும்.

What + am + I + rootverb+ing

What + are + you + rootverb+ing

What + are + we + rootverb+ing

What + are + they + rootverb+ing

What + is + he + rootverb+ing

What + is + she + rootverb+ing

What + is + it + rootverb+ing

இதேபோல் what என்ற இடத்தில் where என்பதைப் போட்டு எழுதிக் கொள்ளுங்கள்.

Where + am + I + rootverb+ing

Where + are + we + rootverb+ing

Where + are + they + rootverb+ing

Where + are + you + rootverb+ing

Where + is + he + rootverb+ing

Where + is + she + rootverb+ing

Where + is + it + rootverb+ing

Where இருக்குமிடத்தில் How போடலாம்.

How + am + I + rootverb+ing

How + are + we + rootverb+ing

How + are + they + rootverb+ing

How + are + you + rootverb+ing

How + is + he + rootverb+ing

How + is + she + rootverb+ing

How + is + it + rootverb+ing

கேள்விகளைக் கேட்கும்போது, structure ஐ நினைவில் வைத்துக் கொண்டு கேட்பதே நல்லது.

I என்றால் am

We, they, you என்றால் are

He, She, It என்றால் is

இதை நன்கு நினைவில் பதியவைத்துக் கொள்ளுங்கள். கேள்வி என்றால் முதலில் கேள்விக்கான வார்த்தையும், அதையடுத்து am, is, are ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றும் வரும்.

இது Present continuous tense.

So, உங்களுக்கு இப்போது

1) Present continuous tense
2) Present continuous tense Negative
3) Present continuous tense Question

4) Present continuous tense where question
5) Present continuous tense when question
6) Present continuous tense what question
7) Present continuous tense why question
8) Present continuous tense How question

ஆகிய அனைத்தும் தெரிந்திருக்கும். இதை நீங்கள் எழுதிப் பார்த்துப் பழகி, ஒருவருகொருவர் படித்துக் காட்டிக் கொள்ளுங்கள்.

Present continuous tense நன்றாகத் தெரிந்து கொண்டேன் என்பவர்கள் மேலே குறிப்பிட்டுள்ள எட்டு structure களையும் உதாரணங்களோடு எழுதி சரியாக இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ளுங்கள்.

# 12. ஜூன் 30, 2019

அடுத்ததாக past continuous tense ஐப் பார்ப்போம்? இது ரொம்ப ரொம்ப simple. Present continuous tenseல் எங்கெல்லாம் am இருக்கிறதோ அங்கெல்லாம் was போட்டுக்
கொள்ளுங்கள். எங்கெல்லாம் is உள்ளதோ அங்கும் was பயன்படுத்துங்கள். எங்கெல்லாம் are உள்ளதோ அங்கே were பயன்படுத்துங்கள். அவ்வளவே தான்.

Present continuous Past Continuous

Am - was

Is - was

Are - were

My husband was sweeping the house.

Shankar’s son was attending the exam.

Kevin was arranging the table.

Flora was decorating the house.

Sheela and shiva were learning german.

I was listening to music.

Conductor was issuing the tickets.

People were standing in a queue.

கீழே சில வார்த்தைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

I / wash / clothes

monkey / jump / tree

sita / shout

joseph / reley

balu / buy / milk

The team members / discuss / seriously

You / give / something

Myself and my friend shakes / eat / biscuits

இங்கு கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகளை வைத்து past continuous tense வாக்கியங்கள் அமையுங்களேன்.

Present continuous க்கு am, is, are

Past continuous க்கு was, was, were

இரண்டுக்குமே root verb எதுவோ அதனுடன் ing சேர்க்க வேண்டும். Continuous என்றாலே 'ing' நினைவுக்கு வந்துவிட வேண்டும்.

கீழே சில வார்த்தைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

Continue

Speak

Observe

Lift

Call

Show

Compose

இந்தச் சொற்களைப் பயன்படுத்தி Past continuous tense அமையுங்கள்.

இதற்கும் structure இருந்தால் இன்னும் எளிதாக இருக்கும் என்று நினைப்பவர்களுக்கு இதோ.

Past continuous tense structure

I + was + root verb + ing

We + were + root verb + ing

They + were + root verb + ing

You + were + root verb + ing

He + was + root verb + ing

She + was + root verb + ing

It + was + root verb + ing

Past continuous tense Negative

I + was + not + root verb + ing

We + were + not + root verb + ing

They + were + not + root verb + ing

You + were + not + root verb + ing

He + was + not + root verb + ing

She + was + not + root verb + ing

It + was + not + root verb + ing

# 13. ஜூலை 7, 2019

சரி past continuous question என்ன? Iக்கு தவிர மற்ற எல்லாவற்றையும் பார்ப்போம்.

ரொம்ப ரொம்ப simple.

We were என்று இருந்தால் were என்பதை முன்னாடி போடுங்கள்.

He was என்பதில் was என்பதை முதலில் கொண்டு செல்லுங்கள். அவ்வளவவான்

Past continuous tense question?

Were + we + root verb + ing

Were + they + root verb + ing

Were + you + root verb + ing

Was + he + root verb + ing

Was + she + root verb + ing

Was + it + root verb + ing

மேலும் கேள்வி கேட்க when, what, where, how, how many, how much போன்றவற்றை Question க்கு முதல் வார்த்தையாக சேர்த்துக் கொள்ளுங்கள்.

இப்பொழுது கீழ்க்கண்டவையும் உங்களுக்கு அத்துப்படியாகியிருக்கும்.

1) Past continuous tense
2) Past continuous tense Nagative
3) Past continuous tense Question
4) Past continuous tense when Question
5) Past continuous tense where Question

6) Past continuous tense why Question
7) Past continuous tense how Question
8) Past continuous tense what Question

சில simple tips. இவற்றை note bookஇல் எழுதிக் கொள்வதோடு மனதிலும் பதிந்து கொள்ளுங்கள்.

Is

Is not = isn’t

Was

Was not = wasn’t

Are

Are not = aren’t

Were

Were not = weren’t

Will

Will not = won’t

Will be

Will not be = won’t be

Have

Have not = haven’t

Has

Has not = hasn’t

Had

Had not = hadn’t

Can

Can not = can’t

Could

Could not = couldn’t

Would

Would not = wouldn’t

Shall

Shall not = shan’t

Should

Should not = shouldn’t

Do

Do not = don’t

Did

Did not = didn’t

Does

Does not = doesn’t

Have been

Haven’t been = have not been

Has been

Hasn’t been = has not been

Had been

Hadn’t been = had not been

இந்தச் சொற்கள் அனைத்தையும் மனதில் பதிய வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் வாக்கியங்களை அமைக்கும்போது, திரும்பத் திரும்ப பெரும்பாலும் இந்தச் சொற்களே பயன்படுத்தப்படும். எந்தெந்த tense பற்றிப் படிக்கிறோமோ அப்போதெல்லாம் இவை குறித்துப் படித்து அவ்வப்போது தெரிந்து கொள்ளலாம்.

# 14. ஜூலை 14, 2019

Present continuous tense past continuous பார்த்தோம். இப்போது past tense பார்க்க வேண்டும்.

ஒரு சிறுவன் இருந்தான். அவன் பெயர் பிரகாஷ்.

There was a boy. His name was Prakash.

அவனுக்கு ஆங்கிலம் தெரியாது.

He did not know English. (அல்லது He does not know English என்றும் எழுத்தலாம்)

அவன் தினமும் ஆங்கில செய்தித்தாளைப் படித்தான்.

He read English newspapers daily.

அவன் நண்பன் அண்ணாமலையும் அவனோடு படித்தான்.

His friend Annamalai also read with him.

அவர்களை நீங்கள் ஒருநாள் சந்தித்தீர்கள்.

One day, you met them.

பிரகாசும், அண்ணாமலையும் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசினார்கள்.

Prakash and Annamalai spoke in English fluently.

Past tense structure

I + past tense (of the root verb)

We + past tense (of the root verb)

They + past tense (of the root verb)

You + past tense (of the root verb)

He + past tense (of the root verb)

She + past tense (of the root verb)

It + past tense (of the root verb)

அதாவது root verb go என்றால் அதன் past tense went

Root verb - past tense

Hit - hit

Bite - bit

Write - wrote

Speak - spoke

Break - broke

Close - closed

Open - opened

பெரும்பாலும் d அல்லது ed சேர்த்தால் past tense கிடைக்கும்.

இவ்வாறு வரும் verb களுக்கு regular verbs என்று பெயர். சில சொற்கள் வேறு மாதிரி உருமாறும். இவற்றுக்குப் பெயர் irregular verbs.

Speak spoke

Give gave

Write wrote

இவை irregular verbsக்கான உதாரணங்கள்.

சரி Past Tense Negative எப்படி எழுதுவது.

I + did not + root verb

We + did not + root verb

They + did not + root verb

You + did not + root verb

He + did not + root verb

She + did not + root verb

It + did not + root verb

Did + not என்பதை didn't என்றும் பயன்படுத்தலாம். Didn't என்ற வார்த்தையைப் படிக்கும்போது நடுவில் வரும் d silent (உச்சரிக்கக்கூடாது)

Questions?

என்ன செய்ய வேண்டும். Did என்பதை முதலில் போட்டுக் கொள்ள வேண்டும்.

Past Tense Question

Did + I + root verb?

Did + We + root verb?

Did + They + root verb?

Did + You + root verb?

Did + He + root verb?

Did + She + root verb?

Did + It + root verb?

When what where how போன்றவற்றை தேவைக்கேற்ப முன்னே சேர்த்துக் கொண்டால் Past Tenseம் ok.

# 15. ஜூலை 21, 2019

இனி Future Tense

I + will + root verb

We + will + root verb

They + will + root verb

You + will + root verb

He + will + root verb

She + will + root verb

It + will + root verb

ஐந்து நிமிடம் கழித்தானாலும் அல்லது ஐந்து வருடத்திற்குப் பிறகானாலும் சரி ‘இனி’ என்றால் அது Future தான்.

I will go to moon.

He will feed his baby on time.

She will take good care of her parents.

They will purchase a printing machine.

You will definitely speak English in another six months.

We will teach you till you understand.

We will always help you.

இதுபோன்ற பல வாக்கியங்களை நீங்கள் அமைத்துப் பார்க்கலாம்.

Future Tenseக்கும் Negative உண்டு. Negative என்றால் not என்ற வார்த்தையை add செய்து கொள்ள வேண்டும். அவ்வளவே.

I will not tell lies.

She will not get promotion.

He will not think about her.

நான் பொய் சொல்ல மாட்டேன். அவளுக்கு promotion கிடைக்காது. அவன், அவளைப் பற்றி நினைக்க மாட்டான். மாட்டேன், மாட்டான், கிடைக்காது, செய்யாது, வராது, போகாது, மாட்டார்கள் என்றெல்லாம் Negative ஆக Sentence சொல்லும்போது not பயன்படுத்த வேண்டும்.

I will not tell lies. என்பது Negative sentence.

I will tell the truth என்பது positive sentence.

I will tell lies என்பதும் positive sentence தான்.

வாக்கியத்தில் not இருக்கிறதா இல்லையா என்பதை வைத்துத்தான் positive sentence ஆ அல்லது negative sentence ஆ என்பதை முடிவு செய்ய வேண்டும். Not என்ற சொல் இருந்தால் negative sentence. Not என்ற சொல் இல்லையென்றால் positive sentence. அந்த வாக்கியத்தின் meaning பற்றியெல்லாம் யோசித்து confuse ஆக வேண்டாம்.

Sankar will confuse everybody.

Seema will not confuse anyone.

Geetha will not cheat others.

Seetha will cheat others.

சங்கர் எல்லாரையும் confuse செய்வார்.

சீமா யாரையும் confuse செய்யமாட்டார் (தமிழில் மாட்டாள் என்றும் சொல்லாம்)

Geetha மற்றவர்களை ஏமாற்ற மாட்டாள்.

சீதா மற்றவர்களை ஏமாற்றுவாள்.

Geetha ஏமாற்றமாட்டாள் என்பது positive ஆன செய்தி. ஆனால் sentenceஐப் பொறுத்தவரை அது negative sentence தான்.

இன்னும் தெளிவாக சொல்ல வேண்டுமானால், Geetha will not cheat others என்பது Geetha பற்றி positive தகவலைச் சொல்கிறது. ஆனால் அது negative sentence.

Seetha will cheat others என்பது Seetha பற்றி negative தகவலைச் சொல்கிறது. ஆனால் அது positive sentence.

See

Watch

Drink

Roll

Sit

Turn

Ride

Try

Brush

மேலே கொடுக்கப்பட்டுள்ள சொற்களை வைத்து future tense positive மற்றும் negative sentence களை எழுதுங்கள். எழுதும்போதும், எழுதிய பின்னரும் வாய்விட்டுப் படிக்க வேண்டும். அதற்கான structure ஐ அருகில் வைத்துக் கொண்டு நாம் எழுதியது சரிதானா என்பதையும் சரி பார்க்க வேண்டும்.

இதுவரை நீங்கள் படித்துள்ள structureகளை வைத்து sentenceகளை எழுதியவற்றை வண்ணக்கதிர் வாட்ஸ்அப் எண்ணுக்கு (9498379729) அல்லது மின்னஞ்சலுக்கு vannakkathir@gmail.com அனுப்பலாம்.

# 16. ஆகஸ்ட் 4, 2019

நாம் இதுவரை பார்த்தவை.

Letters : A முதல் Z வரை

Words : எழுத்துக்களை அர்ததம் வருமாறு அமைத்தால் words.

Vowels : a, e, i, o, u இந்த எழுத்துக்கள் தான் வார்தைகளுக்கு ஒலி வடிவம் கொடுக்கின்றன. இவை இல்லாமல் வார்த்தைகளைப் பேச முடியாது. My, by, shy போன்றவை விதிவிலக்கு y என்பது semi vowel.

Consonants : a, i, e, o, u தவிர மற்ற எல்லா எழுத்துக்களும் consonants. இந்த எழுத்துக்களுக்கென்று தனியாக ஒலிவடிவம் கிடையாது.

Words பல வகைப்படும்.

Article : a, an, the (இது குறித்து விளக்கமாகப் பின்னர் பார்க்கலாம்)

Noun : Naming words. Example Kala, Mala, Ahamed, Table, Chair, Air, Water, Sugar

Nounல் பல வகை உண்டு. Collective Noun, Proper Noun, Countable Noun, Abstract Noun

மேலும் பலவும் உண்டு. Noun என்றால் பெயர்ச்சொல். அது தெரிந்தால் போதும்.

Verb : Action words. ஒரு செயலைக்குறிக்கும் சொல்.

Walk

Talk

Speak

Come

Go

Eat

Sleep

Sing

Save

Delete

Open

Close

Study

Drive

மேலே கூறியவை அனைத்தும் verb.

Sentence : வார்த்தைகளை அர்த்தம் வருமாறு கோர்வையாக அமைத்தால் அது sentence.

Example:

I am a girl.

Sangeetha is dancing

Precilla is sleeping.

வாக்கியங்கள் நான்கு வகைப்படும். (இவை பற்றி பின்னர் விளக்மாகப பார்ப்போம்) இப்போது வகைகளின் பெயரைத் தெரிந்து கொள்வோம்.

Sentencesன் நான்கு வகை

Statement

Imperative sentence

Question or Interrogative sentence.

Exclamation.

Noun வார்ததைகளுக்கு Singular, Plural உண்டு.

Noun வார்த்தைகளுக்கு Gender உண்டு.

Masculine (ஆண்பால்), Feminine (பெண்பால்)

Example:

Feminine Masculine

Girl Boy

Lioness Lion

Tigress Tiger

Noun வார்த்தைகளைப் பற்றி கூடுதல் தகவல்களைத் தரும் வார்த்தைகளே Adjectives

Girl beautiful girl

Noun Adjective Noun

Boy Tall boy

Noun Adjective Noun

Man Intelligent man

Noun Adjective Noun

Chair Plastic chair

Noun Adjective Noun

# 17. ஆகஸ்ட் 11, 2019

Adverbs:

செயலைக் குறிக்கும் சொற்களான verbsஐ விவரிக்கும் சொறகளே Adverbs.

Come Quickly

Verb adverb

Write Neatly

Verb adverb

Walk Slowly

Verb adverb

Run Fast

Verb adverb

Verbs வைத்து Sentence form செய்யும் போது tense என்பதை நினைவில் கொள்ள வேண்டும். Verbs வார்தைகளுக்கு மூன்று முக்கிய tense forms உண்டு.

Verbs களை Regular Verbs, Irregular Verbs என்று வகைப்படுத்தலாம்.

பொதுவாக 'd' அல்லது 'ed' சேர்த்தால் Past tense மற்றும் Participle வார்த்தைகள் கிடைக்கும். இவை Regular Verbs.

Example:

Root verb Past tense Participle

Live Lived Lived

Dance Danced Danced

Shout Shouted Shouted

இவ்வாறில்லாமல் வேறு வடிவம் கொண்டால் அவை Irregular Verbs.

Irregular Verbs Examples:

Root verb Past tense Participle

Come Came Come

Go Went Gone

Write Wrote Written

Verbs களைக் கொண்டு sentence form செய்யக் கற்றுக் கொண்டோம்.

Present continuous tense

Present continuous tense negative

Present continuous tense questions

Present continuous tense W, H questions.

இவற்றின் structure ஐ பார்த்தோம்.

இதேபோல Past continuous tense மற்றும் Past tense வாக்கியங்களுக்கான Structure ஐயும் பார்த்தோம்.

இவ்வாறாக இதுவரை நாம் கற்றவை Letters, Words, Vowels, Consonants, Noun, Verb, adverb, adjective, sentence making and framing questions.

இப்பொழுது மற்ற tense களைப் பார்ப்பதற்கு முன் Active Voice, Passive Voice என்பதைப் பார்க்கலாம். அதற்கு முன் தமிழில் ஒரு வாக்கியம்.

திருவள்ளுவர் திருக்குறளை எழுதினார்.

இதை ஆங்கிலத்தில் சொல்ல வேண்டும்.

Thiruvalluvar wrote Thirukkural

தமிழில் இதை செய்வினை என்று சொல்வார்கள். In English it is ‘Active Voice’.

திருக்குறள் திருவள்ளுவரால் எழுதப்பட்டது. தமிழில் இதை செயப்பாட்டு வினை என்று சொல்வார்கள்.

In English it is ‘Passive Voice’

Active Voice, Passive Voice ஒவ்வொரு tenseக்கும் வேறுபடும். இதை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். எனவே, நாம் ஒவ்வொரு tense ஆக எடுத்துக் கொண்டு அதற்கான Active Voice, Passive Voice என்ன என்பதைப் பார்க்க வேண்டும்.

முதலில் Past Tense ஐ எடுத்துக் கொள்வோம். இதுவே இன்னும் ஐந்தாறு வாரங்களுக்கு மேல் படிக்க வேண்டியிருக்கும்.

Thiruvalluvar wrote Thirukkural.

This is a Past Tense Active Voice Sentence. Now we have to convert this into Passive Voice.

இதை இப்போது Passive Voiceக்கு மாற்ற வேண்டும்.

முதலில் அந்த Sentence ஐ deep ஆகப் படியுங்கள்.

1 2

Thiruvalluvar wrote Thirukkural

Subject verb Object

இரண்டு விஷயங்கள் உள்ளனவா என்று பாருங்கள். முதலாவதாக வருவதற்கு Subject என்று சொல்வார்கள். இரண்டாவதாக வருவது Object என்று சொல்லப்படும்.

# 18. செப்டம்பர் 15, 2019

நாம் பார்த்துக் கொண்டிருந்தது Active Voice, Passive Voice அதுவும் Past Tense Sentence களில் மட்டுமே. நாம் காரோட்டும் போது சில சமயங்களில் reverse எடுக்க வேண்டியிருக்கும். பின்னே சென்று அதன்பின் முன்னே பயணிக்கலாம்.

கடற்கரையில் நடக்கும்போது குழந்தைகள் run fast. பெரியவர்கள் சற்று slow ஆகத்தான் நடந்தே வருவார்கள். அதுபோல, இங்கே இந்தத் தொடரைப் படித்துக் கொண்டிருக்கும் பலர், அத்தனையையும் முடித்துவிட்டு இன்னும் கொஞ்சம் வேகமாகக் கற்றுக் கொள்ளலாம் என்று நினைத்து, அடுத்தடுத்த chapter களுக்குகாகக் காத்திருக்கக் கூடும். சிலர் சிறிது சிறிதாக முன்னேறிக் கொண்டிருக்கலாம். எல்லோரும் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதுதானே ஆசிரியருடைய எண்ணம்.

Ok நாம் Active Voice Passive Voice sentences குறித்து மேலும் கற்பதற்கு முன், சில எளிய விஷயங்களைக் கற்றுகொள்வோம். Preposition குறித்து அறிந்து கொள்வோம்.

In, on, above, below, at, under, up, down, for, of, away from, off, from, to போன்றவை prepositions. நூற்றுக்கும் மேற்பட்ட prepositions உள்ளன. அவற்றுள் சிலவற்றைப் பார்ப்போம்.

நானும், மாலாவும் கடற்கரையில் நடந்தோம்.

Myself and Mala walked in the beach.

இந்த sentenceல் in என்பது preposition.

திவாகர் (முகம் பார்க்கும்) கண்ணாடி வாங்கினான்.

Diwakar bought a mirror.

இந்த sentence ல் preposition கிடையாது.

சிவக்குமார் ஆங்கிலம் கற்றுகொண்டிருக்கிறான்.

Sivakumar is learning English.

இந்த sentence ல் preposition இல்லை.

Myself and Mala walked in the beach from 6am to 7am.

இந்த sentence ல் in என்பதும் from, to என்பதும் prepositions.

Diwakar bought a mirror from a shop.

இந்த sentence ல் from என்பது preposition.

Sivakumar is learning English from Pavithra.

In the sentence given above, ‘from’ is a preposition.

‘பவித்ராவிடமிருந்து’

‘கடையிலிருந்து’

‘6 மணியிலிருந்து’

என்பதற்கு from Pavithra, from the shop, from 6am என்று ஆங்கிலத்தில் எழுதுகிறோம்.

The water level increased from 116ft to 120ft

‘116 அடியிலிருந்து’ என்பதைத்தான்

‘from 116ft’ என்கிறோம்.

நீர்மட்டம் 116 அடியிலிருந்து 120 அடியாக உயர்ந்தது என்றுதான் தமிழில் கூறுவோம். ஆனால் ஆங்கிலத்தில் from 116ft to 120ft என்று தான் கூற வேண்டும்.

முன்பு வேறொரு இடத்தில் குறிப்பிட்டதைப்போல ‘இருந்து’ என்பது தான் ‘from’ என்றாகிறது.

அணையிலிருந்து – from the dam

கடையிலிருந்து – from the shop

தலைவரிடமிருந்து – from the leader

நீதிமன்றத்திடமிருந்து

அல்லது நீதிமன்றத்திலிருந்து – from the court

# 19. செப்டம்பர் 22, 2019

இதுபோல் கீழே உள்ளவற்றை ஆங்கிலத்தில் எழுதுங்கள்.

மும்பையிலிருந்து –

கண்காட்சியிலிருந்து –

வங்கியிலிருநது –

கடலிலிருந்து –

ஆசிரியரிடமிருந்து –

மரத்தச்சரிடமிருந்து –

தையற்காரரிடமிருந்து –

புத்தகத்திலிருந்து –

பாடத்திலிருந்து –

அத்தியாயத்திலிருந்து –

கண்ணிலிருந்து –

காதிலிருந்து –

கோவிலிலிருந்து –

விமானத்திலிருந்து –

கப்பலிலிருந்து –

இதயத்திலிருந்து –

புவியிடமிருந்து –

தெருவிலிருந்து –

தமிழில் 'இருந்து' என்ற சொல்தான் ஆங்கிலத்தில் 'from' என்பதைத் தெரிநது கொண்டோம். நாம் இங்கு பார்ப்பவை எல்லாமே 'general' தான்.

எளிதில் ஆங்கிலம் கற்பதற்கான வழி மட்டுமே.

இப்பொழுது 'to' என்பதைப் பார்ப்போம்.

The Tamilnadu Chief Minister went to London.

The Prime Minister went to Dubai.

Kala went to market.

'லண்டனுக்கு'

'துபாய்க்கு'

'மார்க்கெட்டுக்கு'

என்பதைத்தான் to London,

To Dubai, to market என்று ஆங்கிலத்தில் கூறுகிறோம்.

The President presented the awards to the best teachers on Teachers' Day.

'To' and 'on' are prepositions.

'சிறந்த ஆசிரியர்களுக்கு' என்பதைத்தான் 'Is the best teachers' என்கிறோம்.

Russia will give ₹.7200 crore loan to India.

'இந்தியாவிற்கு' என்பதைத்தான் to India என்று சொல்கிறோம்.

திவ்யாவிற்கு to Divya

ராஜாவிற்கு to Raja

ராஜாவிற்கு to the king

கடைக்கு to the shop

குழந்தைக்கு to the child

வாக்குச்சாவடிக்கு –

